# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC. 401/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : PW- 2 | Village: |
| Name : ரமேஷ் | Age :53 |
| Father's/Husband's Name : ஏகநாதன் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.12.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

குவிமுச. பிரிவு 311ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட Crmp.No.3885/2023. 08.09.2023ம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

மானம்பாடி கிராமத்தில் நான் மிராசுதாரராக இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எவ்வளவு ஏக்கர் நிலம் உள்ளது என்றால் 2 ஏக்கர் நிலம் உள்ளது. நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றாலும் விவசாய கூலி வேலைக்கு செல்வதில்லை என்றாலும்

சரியல்ல, செல்வேன். வழக்கு விபத்தில் இறந்துபோன ராபர்ட்ஸ்டான்லி எனது விவசாய நிலத்தில் விவசாய கூலியாக வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் அன்று இரவு 11.30 மணிக்கு நான் எதற்காக சோழபுரம் பேருந்து நிலையம் சென்றேன் என்றால் நான் சோழபுரத்தில் மகாலெட்சுமி சுவீட் ஸ்டால் அருகில் வைத்திருந்த பழக்கடையை பூட்டுவதற்காக சென்றேன். நான் கடையை பூட்டிக்கொண்டிருந்தபோதுதான் சம்பவத்தை பார்த்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். நான் கடையை பூட்டிக்கொண்டிருந்தபோது சத்தம் கேட்டது என்றால் சரிதான். சத்தம் கேட்ட பிறகு நான் திரும்பி பார்த்தேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பிறகு சுமார் அரை மணி நேரத்தில் போலிசார் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அப்போது போலிசாரிடம் நான் நடந்த விவரத்தை சொன்னேன் என்றால் சரிதான். அதற்கு பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்தார்கள். நான் போலிசார் விசாரணையில் ராபர்ட்ஸ்டான்லி சோழபுரம் பேருந்து நிறுத்தம் அருகே நடுத்தெருவில்இருந்து அவரது வீட்டிற்கு செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது பஸ் ஸ்டாப்பில் ஒரு பேருந்து நின்று கொண்டிருந்ததாகவும் அந்த பேருந்தை கும்பகோணத்திலிருந்து சென்னை நோக்கி சென்ற ஒரு அரசு பேருந்து முந்தி சென்றபோது ராபர்ட்ஸ்டான்லி சென்ற இருசக்கர வாகனம் மோதியதாக சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சொல்வதுபோல எனக்கு சோழபுரத்தில் கடை இல்லை என்றாலும் ராபர்ட்ஸ்டான்லி எனது விவசாய நிலத்தில் கூலி வேலை செய்ததால் போலிசார் கேட்டு கொண்டதின்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.12.18 17:47:39 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**